**தோட்டக்கலை துணை இயக்குநர்(பொ.), கடலூர் அவர்களின் செயல்முறை ஆணைகள் முன்னிலை: திரு.செள.அருண், எம்.எஸ்.சி(தோ)**

எண்.அ1/5672/2023 நாள். 11.01.2024

பொருள் : பணிக்குழு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தினால் தொகுதி 4ல் அடங்கிய பணிகளுக்கான நேரடித் தேர்வு 2022-23ல் இளநிலை உதவியாளர் (பிணையம் அற்றது) பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு பணிநியமனம் செய்யும் பொருட்டு தோட்டக்கலை துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு இவ்வலுவலக கட்டுப்பாட்டில் பணியில் சேர்ந்த இளநிலை உதவியாளர்களுக்கு பணிவரன்முறை செய்து ஆணையிடல் தொடர்பாக.

பார்வை :

1) செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடித எண்.1919/PSD-D2 நாள்: 02.09.2023 மற்றும் 16.11.2023
2) ஆணையர், வேளாண்மை சென்னை-5 அவர்களின் செயல்முறை ஆணை எண்.OPS5/92705/2023 நாள்: 08.12.2023
3) தோட்டக்கலை இயக்குநர் சென்னை-5 அவர்களின் செயல்முறை எண்.MES2/24910/2023 நாள்: 14.12.2023

** *** **

**ஆணை :**

பார்வை 1-ல் காணும் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய கடிதத்தின்படி 2022-23ம் ஆண்டில் தொகுதி 4ல் அடங்கிய தேர்வுகளில் தேர்ச்சிபெற்று இளநிலை உதவியாளர் (பிணையம் அற்றது) பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு வேளாண்மை துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை 2ல் காணும் வேளாண்மை ஆணையர் சென்னை-5 அவர்களின் செயல்முறை ஆணையின்படி பணிநியமனம் வழங்கும் பொருட்டு தோட்டக்கலைத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதையடுத்து பார்வை 3ல் காணும் தோட்டக்கலை இயக்குநர் சென்னை-5 அவர்களின் செயல்முறை ஆணையின்படி இவ்வலுவலக கட்டுப்பாட்டில் பணியில் சேர்துள்ள இளநிலை உதவியாளர்களின் பணியினை கீழ்காணும் விவரப்படி நிபந்தனைகளுக்கு உட்பட்டு அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | பெயர் மற்றும் பதவி | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன் முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | திரு.ச.பாபு,<br>இளநிலை உதவியாளர்.<br>(பிணையம் அற்றது) | 21.12.2023<br>பிற்பகல் | 21.12.2023<br>பிற்பகல் முதல் |
| 2 | திரு.மு.வீரமணி,<br>இளநிலை உதவியாளர்.<br>(பிணையம் அற்றது) | 21.12.2023<br>பிற்பகல் | 21.12.2023<br>பிற்பகல் முதல் |
| 3 | செல்வி.கோ.சுஷ்மா மஞ்சரி,<br>இளநிலை உதவியாளர்.<br>(பிணையம் அற்றது) | 22.12.2023<br>முற்பகல் | 22.12.2023<br>முற்பகல் முதல் |

1. சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் நிலுவையில் உள்ள தொகுதி 4ல் அடங்கிய பணி வரன்முறை தேர்வு குறித்து ரிட் மனுவின் மீதான தீர்ப்பிற்கு கட்டுப்பட்டு இவர்களின் பணி வரன்முறை செய்யப்படுகிறது.
2. இவர்கள் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) பதவியில் இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தினை மூன்றாண்டு தொடர் பணிக்காலத்திற்குள் இளநிலை உதவியாளர்களுக்கான பவானிசாகர் அடிப்படை பயிற்சியை நிறைவு செய்ய வேண்டும்.
3. இவர்கள் தகுதிகாண் பருவம் முடித்த பின்னரே இளநிலை உதவியாளர் பதவியில் இரண்டாவது மற்றும் தொடர் காலமுறை ஊதிய உயர்வுகள் பெற தகுதியுடையவராகிறார்கள்.

தோட்டக்கலை துணை இயக்குநர்,
கடலூர்

11.1.24

பெறுநர்

1) திரு.ச.பாபு, இளநிலை உதவியாளர், இவ்வலுவலகம்.
2) திரு.மு.வீரமணி, இளநிலை உதவியாளர், இவ்வலுவலகம்.
3) செல்வி.கோ.சுஷ்மா மஞ்சரி, இளநிலை உதவியாளர், இவ்வலுவலகம்.

நகல் : இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சென்னை - 5 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.

நகல் : இருப்பு கோப்பு (பணிக்குழு)
உதிரி: 1